# வேதவசனங்களுக்கு விளக்கம் அளித்தலுக்குத் தேவையானவைகள்

*விளக்கம் அளித்தலுக்குத் தேவையானவைகள் அல்லது தேவைப்படுபவைகள் என்ன? வேதவசனங்களைப் புரிந்துகொள்ளவும் அவற்றைப் பற்றிய நமது படிப்பில் இருந்து ஆதாயம் பெறவும் தேவையான எண்ணப்போக்குகளும் திறன்களும் யாவை?*

## எது தேவைப்படுவ*தில்லை?*

வேதாகமத்திற்கு விளக்கம் அளிக்க நமக்கு எது தேவை என்று நாம் கண்ணோக்குவதற்கு முன், வேதவசனங்களுக்கு, சரியாக விளக்கம் அளிக்கத் தேவை*ப்படாத* சில விஷயங்களைப் பற்றிக் கலந்துரையாட நாம் விரும்புகிறோம்.

### வேதாகமத்தைக் கற்றுத் தேர்ந்தவராக இருத்தல் என்பது அவசியமல்ல

முதலாவது, வேதவசனங்களுக்கு விளக்கம் அளிக்க நாம் வேதாகமத்தைக் கற்றுத் தேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று அவசியமில்லை. எவரொருவரும் வேதாகமத்தை வாசிக்கவும் மக்கள் இரட்சிக்கப்படுவதற்குச் செய்ய வேண்டியவை பற்றி தேவன் விரும்புவது என்ன என்பதைப் புரிந்து கொள்ளவும் முடியும்.

சிலவேளைகளில் வல்லுநர்கள், வேதாகமத்தைப் பற்றிய யாவற்றையும் அதிகமாக அறிவதற்கு, அதை வாசிக்கும் ஒரு வாசகர் ஒரு முதுகலைப் பட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும், மூல மொழிகளில் வாசித்துப் புரிந்துகொள்ளக் கூடியவராக இருக்க வேண்டும், பழங்கால வரலாற்றை அறிந்திருக்க வேண்டும், மற்றும் வேதாகமம் எழுதப்பட்ட காலத்தின் கலாச்சாரங்களுக்கு முற்றிலும் பழக்கமானவராக இருக்க வேண்டும் என்று கூறுவதாகக் காணப்படுகிறது. உதாரணமாக பெர்னார்டு ராம் என்பவர், *புரொட்டஸ்டன்டு வேதாகம விளக்கம்* என்ற தமது புத்தகத்தில், வேதாகமத்திற்கு விளக்கம் அளித்தல் என்பது கற்றுத் தேர்ந்த ஒரு சிறு குழுவினருடன் மட்டுப்படுத்தப்படுவதில்லை என்று முதலில் கூறினார்; ஆனால் பின்பு அவர், விளக்கம் அளிப்பவரின் மனரீதியான தகுதிகளைப் பற்றிப் பேசச் சென்றார், அவ்வாறு பேசும்போது அவர், மற்றவர்களுக்கு விளக்கம் அளிக்க விரும்புபவர் மேல்நிலைக் கல்வித்தகுதியும் மூல மொழிகள் பற்றிய அறிவும் கொண்டிருக்க வேண்டும் என்று தாம் நம்புவதைத் தெளிவாக்கினார்.[1]

இந்தக் கண்ணோட்டக் கருத்தில் இருந்து நாம் இரு உண்மைகளைக் கற்றறிய முடியும்: (1) வேதாகமப் படிப்பு என்ற துறையில் வல்லுநர்கள்

உள்ளனர் மற்றும் அவர்கள் என்ன கூறுகின்றனர் என்பதை ஆழ்ந்து சிந்திக்க நாம் மனவிருப்பம் கொண்டிருத்தல் என்பது அவசியமாகும்; (2) ஒரு கல்வியைப் பெற்றுக்கொள்ளுதலில், வேதாகமத்தின் மூல மொழிகளைப் படித்தறிவதில் மற்றும் பழங்காலக் கலாச்சாரங்களைப் பற்றி கற்றறிவதில் மதிப்பு உள்ளது. அதே வேளையில், வேதாகமம் தொடக்க காலத்தில் மக்களுக்குப் பொதுவானதாக இருந்த மொழியில் எழுதப்பட்டது மற்றும் அதைப் புரிந்துகொள்ளும்படி அவர்கள் எதிர்பார்க்கப்பட்டனர் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும்! வேதவசனங்கள் என்ற வகையில் பவுலின் எழுத்துக்களைப் பற்றிப் பேதுரு பேசுகையில் அவர், "அவன் சொன்னவைகளில் சில காரியங்கள் அறிகிறதற்கு அரிதாயிருக்கிறது" என்று கூறினார் (2 பேதுரு 3:15, 16). அவர் "ஒவ்வொரு காரியமும்" என்றோ அல்லது "பெரும்பான்மையான காரியங்கள்" என்றோ கூறவில்லை, ஆனால் "சில காரியங்கள்" என்றே கூறினார் என்பதைக் கவனியுங்கள். உண்மையில், வேதாகமத்தில் நாம் காண்பவற்றில் பெரும்பான்மையானவை, புரிந்துகொள்வதற்குச் சார்பளவில் சுலபமாகவே உள்ளன.[2]

ஆகையால் நாம், வேதாகமத்தை வாசிக்கவும் நமக்குநாமே அதற்கு விளக்கம் அளிக்கவுமான நமது உரிமையைக் கைவிடக்கூடாது. ஓரளவிற்கு அந்த உரிமையே பதினாறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட சீர்திருத்தமாக - அதாவது எல்லா விசுவாசிகளின் ஆசாரியத்துவம் மற்றும் வேதாகமத்தை வாசிக்கவும் அதற்குத் தங்களுக்குத் தாங்களே விளக்கம் அளிக்கவும் விசுவாசிகள் யாவருக்குமான உரிமை என்பதாக - இருந்தது. வேதாகமத்தின் அடிப்படைச் செய்தியானது அதை வாசிக்கும் மற்றும் அதைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும் யாராலும் அவர் அல்லது அவள் வேறு எந்தப் புத்தகத்தையும் படித்துப் புரிந்துகொள்வது போலவே, புரிந்துகொள்ளப்பட முடியும்.

## பரிசுத்த ஆவியானவரால் ஒளியூட்டப்படுதல் என்பது தேவைப்படுவதில்லை

பரிசுத்த ஆவியானவரால் விசேஷித்த வகையில் ஒளியூட்டப்படும் அனுபவத்தை நாம் கொண்டிருக்க வேண்டும் என்பது புரொட்டஸ்டன்டியத்தில் பிரபலமான கருத்தாக உள்ளது. உதாரணமாக, ராம் என்பவர், விளக்கம் அளிப்பவரின் "ஆவிக்குரிய தகுதிகளை" தந்தபோது, அவர் "வழிகாட்டவும் இயக்கவும் பரிசுத்த ஆவியானவர் மீது முழுமையாகச் சார்ந்திருத்தல்" என்ற கருத்தை உள்ளடக்கினார்.[3] இந்த நம்பிக்கையை விவரிக்கும் இன்னொரு ஆதாரமூலம் பின்வருமாறு:

> தேவனுடைய சத்தியத்தைப் பற்றிய இவ்விதமான கீழ்ப்படிதல் உள்ள புரிந்துகொள்ளுதலுக்கு அவர் தமது பகுதியில் ஆதாரமூலத்தை அளித்திருக்கிறார்: பரிசுத்த ஆவியானவரின் ஒளியூட்டப்படுதல். *பரிசுத்த ஆவியானவரால் மறுபடியும்* ஜெநிப்பிக்கப்படுதல் என்பது விசுவாசத்தின் தேவையினுடைய தொடர்பயனாக உள்ளது. அதாவது, மக்கள் தங்கள் வாழ்வை, ஆண்டவர் என்ற வகையில் இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தவுடன், அவர்களுக்குள் வேதாகமம் பேசுகிற ஒரு பணியைத் தேவன் நிகழ்த்துகிறார். இந்த உள்ளான செயல்முறையானது விசுவாசியை, ஆவிக்குரிய சத்தியத்தைப் புரிந்துணரவும் மற்றும் அதைப் பற்றிக்கொள்ளவும்

> *கூடியவர்களாக்குகிறது, இது அவிசுவாசிகளுக்கு கிடைக்கப்பெறாத ஒரு திறனாக உள்ளது (1 கொரிந்தியர் 2:6-16; 2 கொரிந்தியர் 3:15-18).*[4]

*இந்தக் கண்ணோட்டத்தில் - புரிந்துகொள்ளுதலில் நாம் தேவனுடைய உதவியை நாடவேண்டும் என்ற - சத்தியத்தின் கூறு ஒன்று அடங்கியுள்ளது. நாம் ஞானத்திற்காக ஜெபிக்க வேண்டும் (யாக்கோபு 1:5), ஆனால் ஜெபம் என்பது நேர்மையான முயற்சிக்குப் பதிலியாக இருப்பதில்லை.*[5]

*இந்தக் கண்ணோட்டம், தவறான கூறுகளையும் கொண்டுள்ளது. உதாரணமாக, இது இரு திறவுகோல் வசனங்களைத் தவறாகப் புரிந்துகொண்டதன் அடிப்படையில் அமைந்துள்ளது.*

*சிலர் ("ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" என்று கூறுகிற) யோவான் 3:3ம் வசனமானது, மறுபடியும் பிறவாதிருக்கும் ஒரு நபர் தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிப் புரிந்துகொள்ள முடியாது என்று போதிப்பதாக உரிமைகோருகின்றனர்.*[6] *இந்த உரிமைகோருதல் பின்வரும் இரு காரணங்களினால் சாத்தியமற்றதாக உள்ளது. (1) ஒருவர் மறுபடி பிறப்பதற்குச் சத்தியத்தைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. நடபடிகள் புத்தகத்தில் கிறிஸ்தவர்கள் ஆனவர்கள், அவர்கள் கிறிஸ்தவர்கள் ஆவதற்கு முன்னர் - அதாவது, அவர்கள் மறுபடி பிறப்பதற்கு முன்னர் - சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதைக் கேள்விப்பட்டு அதைப் புரிந்துகொண்டனர் (1 பேதுரு 1:22-25 வசனப்பகுதியை ஒப்பிட்டுக் பார்க்கவும்). (2) யோவான் 3:3ல் தேவனுடைய இராஜ்யத்தை "காணுதல்" என்பது இராஜ்யத்தைப் "புரிந்துகொள்ளுதல்" என்று அர்த்தப்படுவதில்லை. அதை சந்தர்ப்பப்பொருள் தெளிவாக்குகிறது. யோவான் 3:5 இதற்கு இணைவசனமாக உள்ளது மற்றும் அவ்வசனத்தில் "பிரவேசித்தல்" என்பது இதற்கு சமமான வார்த்தையாக உள்ளது. ஆகவே, "காணுதல்" என்பது "பிரவேசித்தல்" என்பதற்குச் சமமானதாக இருக்க முடியும். இந்த அர்த்தமானது, "காணுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (eiseltheim என்ற) கிரேக்க வார்த்தையானது "அனுபவித்தல்" என்று அர்த்தப்படக் கூடும் என்ற உண்மையினால் உறுதிப்படுத்தப்படுகிறது.*[7] *யோவான் 3:3ல் இராஜ்யத்தைக் "காணுதல்" என்பது அதை "அனுபவித்தல்" என்று அர்த்தப்படுகிறது.*[8]

*1 கொரிந்தியர் 2ம் அதிகாரத்தில் உள்ள வசனப்பகுதியொன்று மிகவும் அடிக்கடி தவறாகப் பயன்படுத்தப்படக்கூடிய இரண்டாவது வசனப்பகுதியாக உள்ளது, இது "பரிசுத்த ஆவியானவரால் ஒளியூட்டப்பட்டவர்கள்" மாத்திரமே தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ள முடியும் என்று போதிப்பதாகச் சிலர் உரிமைகோருகின்றனர். 14ம் வசனம் இவ்வசனப் பகுதியின் திறவுகோல் வசனமாக உள்ளது:*

> *ஆவிக்கேற்றபிரகாரம் இல்லாத (அதாவது "ஜென்மசுபாவமான" மனிதர், "மிருக இயல்புள்ள" மனிதர்) மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ("விஷயங்களை"; "கொடைகளை" என்பது மூலப்பிரதியில் இல்லை) ஏற்றுக் கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான் ("புரிந்துகொள்ள மாட்டான்"). (மேலும் மற்ற வேதாகமங்களில் காணவும்.)*

இங்குள்ள கருத்தானது 1 கொரிந்தியர் 1:18-25ல் பவுல் கூறிய கருத்தைப் போன்றதாக உள்ளது: சுவிசேஷமானது தங்கள் சுயஞானத்துடன் தங்களை மட்டுப்படுத்திக் கொள்பவர்களுக்குப் பைத்தியமாக உள்ளது. அவிசுவாசியாக இருப்பவர் பரிசுத்த ஆவியானவரால் ஒளியூட்டப்படும் வரை ஒன்றும் அறிய இயலாது என்பது 14ம் வசனத்தின் போதனையாக இருப்பதில்லை, ஆனால் ஜென்ம சுபாவமான மனிதர் சுவிசேஷத்தின் போதனைகளை ஏற்றுக்கொள்வதும் இல்லை, அவற்றை முழுமையாக மதிப்பதும் இல்லை என்பதே இதன் போதனையாக உள்ளது.[9]

அவிசுவாசியாக இருப்பவர் வேதாகமத்திற்கு விளக்கம் தருவதற்கு முன்னர், அவர் பரிசுத்த ஆவியானவரிடம் இருந்து உதவி பெறவேண்டும் என்று பவுல் போதிக்கவில்லை. வேதவசனங்களுக்கு விளக்கம் அளிப்பதற்குப் பரிசுத்த ஆவியானவரால் விசேஷித்த வகையில் ஒளியூட்டப்பட வேண்டும் என்ற கண்ணோட்டமானது குறைந்தபட்சம் பின்வரும் மூன்று தர்க்கரீதியான முரண்பாடுகளை உள்ளடக்கி இருக்கிறது: (1) இது, நாம் புதிய ஏற்பாட்டைப் படிப்பதன் மூலமாக இரட்சிக்கப்பட முடியாது என்று கருத்துத் தெரிவிக்கிறது. அவிசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரைக் கொண்டிருப்பது இல்லை; ஆனால் அவர்கள் இரட்சிக்கப் படுவதற்கு சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அதைப் புரிந்துகொண்டு அதற்குக் கீழ்ப்படிய வேண்டும் மற்றும் இவற்றை அவர்களால் செய்ய முடியும். (2) இது, வேதவசனங்கள் தொடக்கத்தில் தேவனால் ஏவப்பட்டது தவறானதாக இருந்தது என்று கருத்துத் தெரிவிக்கிறது. தேவனுடைய செய்தித்தொடர்பைப் புரிந்துகொள்வதற்கு ஒரு இரண்டாவது ஏவுதல் தேவைப்படும் வகையில் அவர் மனிதருக்குத் தமது செய்தித் தொடர்பை ஏற்படுத்துவாரா? (3) இது தேவனைப் பிரிவினையின் ஆதாரமூலமாக்குகிறது. "ஒளியூட்டுதல்" என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள் வெவ்வேறு முடிவுகளை அடைந்துள்ள படியால், அது அவர்களின் மாறுபட்ட விளக்கம் அளித்தல்களுக்குத் தேவனை ஆதாரமூலமாக்குகிறது. ஆனால் வேதாகமமோ, அவர் கலகத்திற்குத் (குழப்பத்திற்கு) தேவனாக இருப்*பதில்லை* என்று கூறுகிறது (1 கொரிந்தியர் 14:33).

### பரிசுத்தமானதொரு வாழ்வை வாழுதல் தேவைப்படுவதில்லை

நல்லதொரு விளக்கம் அளித்தலுக்குப் பரிசுத்தமான வாழ்வை வாழுதல் அவசியம் என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. இருப்பினும், கிறிஸ்தவர்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழும்படி கேட்டுக்கொள்ளப்படுகையில், வேத வசனங்களுக்கு விளக்கம் அளிப்பதற்கு ஒருவர் விசுவாசம் நிறைந்த கிறிஸ்தவராக இருக்க வேண்டுமென்றோ அல்லது அதற்காக கிறிஸ்தவராகக் கூட இருக்க வேண்டுமென்றோ அவசியமில்லை.

ஒரு வேதவசனப் பகுதி அதன் தோற்றகாலச் சந்தர்ப்பப் பொருளில் அர்த்தப்படுத்தியது என்ன என்பதைப் புரிந்துகொள்ளுதலும் அந்த வசனப்பகுதியை *நடைமுறைப்படுத்துவதும்* (அல்லது அதன் போதனைகளை *ஏற்புடையதாக்கிக் கொள்ளுதலும்*, அதாவது, வேதாகமம் போதிப்பதன்படி *வாழ்தலும்* தேவனுடைய அந்த வசனம் நமக்குக் கொண்டுவர விருப்பநோக்கம் கொண்டுள்ள பயன்களைப் *பெறுவதும்*) ஆகிய இரண்டிற்கும் இடையில்

வித்தியாசப்படுத்திக் காணுதல் நமக்கு அவசியமானதாகவே உள்ளது. ஒருவர் ஒரு வேதவசனத்தை, அது போதிப்பதில் இருந்து பயன் அடையாமலேயே அதைப் *புரிந்துகொள்ள இயலும்*. அவர் “விபசாரம் செய்யாதிருப்பாயாக” என்று வேதாகமம் கூறுகிறபோது (யாத்திராகமம் 20:14), அது அர்த்தப்படுத்துவது என்ன என்பதைச் சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும், இருப்பினும் அவர் தொடர்ந்து விபசாரம் செய்துகொண்டிருக்கலாம்.[10]

விளக்கம் அளித்தலுக்கு, பரிசுத்தமான வாழ்வை வாழுதல் தேவைப்படுவதில்லை என்பது ஏன்? வேதவசனத்திற்கு விளக்கம் அளிப்பதற்கு நீதியுள்ள வாழ்வு அவசியமாக உள்ளது என்று நம்புவது, கிறிஸ்தவரல்லாதவர்கள் அல்லது உண்மையற்றுப்போன கிறிஸ்தவர்கள், வேதாகமத்தைப் படிப்பதன் மூலம் எந்தப் பயனையையும் பெற்றுக்கொள்ள முடியாது என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் இரட்சிக்கப்படுவதற்குச் செய்ய வேண்டியது என்ன என்பதைப் பற்றிய ஒரு புரிந்துகொள்ளுதலைப் பெற்றுக்கொள்ள முடியும். “கிறிஸ்துவின் வசனத்தை” கேள்விப்படுதலின் மூலம் விசுவாசம் வருகிறது (ரோமர் 10:17) மற்றும் நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம் (ரோமர் 10:9, 10).

நாம் ஒருவர் மற்றவருடன் பேசுவது போன்றே தேவன் மனிதகுலத்துடன் பேசியதால், வேத வசனங்களைப் புரிந்துகொள்வதற்குப் பரிசுத்தமான வாழ்வு தேவைப்படுவதில்லை. ஷேக்ஸ்பியர் அல்லது வேறு எந்த இலக்கியவாதி களும் என்ன எழுதினர் என்பதைப் பற்றி விளக்கம் அளிப்பதற்கு, ஒருவர் அந்த இலக்கியவாதிகள் மீது “நம்பிக்கை” கொண்டிருக்கத் தேவையில்லை. பரிணாமம் பற்றி நாம் நம்பிக்கை கொண்டிராதிருப்பினும், பரிணாமம் பற்றிய ஒரு புத்தகத்தை நாம் வாசிக்கவும் அதற்கு விளக்கம் அளிக்கவும் முடியும்.

தேவன் *மனிதர்களிடம், மனிதர்கள் மூலமாக, மனிதர்களின் மொழியைப் பயன்படுத்திப்* பேசினார் என்பதே ஏவுதல் என்ற கருத்தின் சாராம்சமாக உள்ளது. ஆகையால், மனிதர்களிடம் தொடங்கப்பெற்ற வார்த்தைகள் புரிந்துகொள்ளப்படுவது போன்றே, வார்த்தைகளில் உள்ள வேதாகமத்தின் செய்தியும் புரிந்துகொள்ளப்பட முடியும். புரிந்துகொள்ளப்படுதல் என்பது வேதாகமத்தின் வார்த்தைகளுக்கும் வரலாற்றுப் பாடத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடாக இருப்பதில்லை. மாறாக, இவை ஒவ்வொன்றிலும் உள்ள பாடக்கருத்து, தோற்றம், சார்ந்திருக்கும் தன்மை மற்றும் முற்றிலுமான தனிச்சிறப்பு ஆகியவையே இவ்விரண்டிற்கும் இடையிலான வேறுபாடாக உள்ளது. வேதாகமத்திற்கு விளக்கவுரை அளிக்கும்போது நாம், வரலாற்றிற்கு விளக்கம் அளிக்கும் அதே முறைமைகளைப் பயன்படுத்த முடியும். ஏன்? ஏனென்றால் தேவன் மனிதர்களிடம், மனிதர்கள் மூலமாக, மனிதர்களின் மொழியைப் பயன்படுத்திப் பேசினார். ஆகையால் திறந்த மனதுடன் வேதவசனங்களை வாசிக்கும் ஒரு அவிசுவாசி, ஒரு விசுவாசி பெறும் அதே முடிவுகளை அடைகிறார், *இவ்விருவரும் வேதவசனங்களை மாத்திரம் ஆழ்ந்து சிந்தித்தால் இதுதான் நடைபெறும்*. இருப்பினும், அவிசுவாசி வேதவசனத்தை முழுமையாக மதிக்காமலோ அல்லது அதன் முழுத்தனிச்சிறப்பை உணர்ந்தறியாமலோ இருக்கலாம்.

அப்படியென்றால், வேதாகமத்தைப் பொருத்தமட்டில் அவிசுவாசிகளின் கல்வித்திறனை நாம் எவ்வாறு கண்ணோக்க வேண்டும்? அவிசுவாசிகள்,

வேத வசனம் கூறுவதைக் கையாண்டு அது தனது முதல் வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன என்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்தார்கள் என்றால், அவர்கள் எழுதியது சிறப்புத்தகுதி உள்ளதாக இருக்கலாம்.

## தேவைப்படுபவை என்ன?

வேதாகமத்திற்கு விளக்கம் அளிக்கத் தேவைப்படுபவை என்ன? எண்ணப்போக்குகள் மற்றும் திறன்கள் ஆகிய இரண்டையும் நாம் ஆழ்ந்து சிந்திப்போம்.

**தக்கவகையிலான எண்ணப்போக்குகள் தேவைப்படுகின்றன**

பாடக்கருத்தைப் பற்றி சரியான எண்ணப்போக்கு இல்லாமல் நாம் எந்த ஒரு விஷயத்தையும் கற்றுக்கொள்ள இயலாது. தக்க வகையிலான எண்ணப்போக்குகளில் குறைவுபடும் ஒரு நபர், வேதாகமத்தின் சத்தியங்களைக் கற்றுக்கொள்வதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதும் சாத்தியமற்றதாக உள்ளது. இந்த எண்ணப்போக்குகள் யாவை? இங்கு முன்வைக்கப்பட்டுள்ள ஒன்பது கருத்துக்களில் முதல் ஆறு கருத்துக்கள், ஒரு வசனப்பகுதியை அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் விளக்கம் அளிக்க அவசியமானவைகளாக உள்ளன. (ஷேக்ஸ்பியர் எழுதியவற்றிற்கு விளக்கம் அளிப்பதற்கு இதே எண்ணப்போக்குகளை ஒருவர் கொண்டிருக்க வேண்டும்.) வேதவசனத்தை வாசிப்பவரின் வாழ்வில் அது விரும்பத்தக்க செயல்விளைவைக் கொண்டிருக்க வேண்டுமானால், கடைசி மூன்று கருத்துக்கள் அவசியமானவைகளாக உள்ளன.

1. *கற்பதில் ஆர்வமாயிருத்தல்.* நீதியின்மேல் ‘‘பசிதாகமுள்ளவர்கள்’’ மாத்திரமே திருப்பியடைவார்கள் (மத்தேயு 5:6). எஸ்றாவைப் போன்று நாம், ‘‘கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், … கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும்’’ நமது இருதயங்களை அமைத்துக்கொண்டிருக்க வேண்டும் (எஸ்றா 7:10).

2. *வெற்றியை எதிர்பார்த்தல்.* வேதாகமம் புரிந்துகொள்ளப்படக் கூடியது என்று நாம் நம்ப வேண்டும் மற்றும் அதைப் புரிந்துகொள்ளும்படி நாம் எதிர்பார்க்க வேண்டும் (எபேசியர் 3:4ஐக் காண்க). (வேதாகமம் போன்ற) எழுதப்பட்ட புத்தகம் ஒன்றிற்கு நாம் விளக்கம் அளிக்க முடியும் என்று நம்பாத வரையில், அவ்வாறு செய்வதற்கான முயற்சியை நாம் மேற்கொள்வது சாத்தியமல்ல.

3. *சத்தியத்தின் மீதான அன்பு.* 2 தெசலோனிக்கேயர் 2:9-12ல், “பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்’’ இது ‘‘அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக் குள்ளாக்கப்படும்படிக்கு’’ என்ற விளைவை உண்டாக்கும் என்று பவுல் கூறினார். குறிப்பிட்ட இந்த மக்களுக்கு வஞ்சகத்தைத் தேவன் அனுப்பியது ஏன்? “இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்’’ என்று பவுல் கூறினார். சத்தியத்தை நேசிக்கத் தவறுதல் ஆக்கினைத் தீர்ப்பை விளைவிக்கும்.

உண்மையில், எந்த விஷயத்தையும் கற்றுக்கொள்ள விரும்பும் எவரொருவரும் சத்தியத்தை நேசிக்க வேண்டும். காரீயத்தைத் தங்கமாக மாற்ற

முடியும் என்று நம்பும் ஒருவரைப் பற்றிக் கற்பனை செய்து பாருங்கள்: அவர் வேதியியலிலோ அல்லது உலோகத் தொழிலிலோ ஒரு உயர்தரமான வகுப்பில் சேர்ந்து படித்து, தமக்குக் கற்பிக்கப்பட்ட உண்மையைக் காட்டிலும் தமது கற்பித பாடத்தை அதிகமாய் நேசிக்கிறார் என்றால், அவர் அந்த வகுப்பில் எந்த விஷயத்தையும் கற்றறிய மாட்டார்.

4. *பணிசெய்ய மனவிருப்பம் கொண்டிருத்தல்.* தேவனுடைய வசனத்தைப் புரிந்துகொள்வதற்கு நாம் ஊக்கமாகப் பணிசெய்ய மனவிருப்பமாக இருக்க வேண்டும் (காண்க 2 தீமோத்தேயு 2:15; 1 பேதுரு 3:15). எல்லா விஷயமும் புரிந்துகொள்ளச் சுலபமாக இருப்பதில்லை; சிலவேளைகளில் நாம், புதையலுக்காகத் தோண்ட வேண்டியிருக்கும். மக்கள் கடினமாக முயற்சி செய்யாததாலேயே வேதவாக்கியங்களை அடிக்கடி புரிந்துகொள்ளாது இருக்கின்றனர்.

5. *தவறான அல்லது முன் அனுமானம் செய்யப்பட்ட கருத்துக்கள் இல்லாமை.* முன் அனுமானம் உள்ள சில கருத்துக்களாவது இல்லாது வேதாகமத்தை அணுகுதல் என்பது ஏறக்குறைய சாத்தியமற்றதாக இருந்தாலும், நமது படிப்பில் நடுநிலை தவறாததாக இருப்பதற்கு நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பாகச் செயல்பட வேண்டும் (நடபடிகள் 17:11; லுக்கா 8:15).

நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது (அல்லது வேறு எந்தப் பாடக்கருத்தையாவது வாசிக்கும் போது கூட) திறந்த மனதுடன் இருத்தல் அவசியமாக உள்ளது. மூடிய மனங்கள் தவறான முடிவுகளுக்கு வழிநடத்துகின்றன. தேவனுடைய வசனத்தை நாம் படிக்கும்போது, நாம் காணவிரும்புபவற்றை மாத்திரம் காணுதலுக்கு எதிராக நம்மை நாம் எவ்வாறு காத்துக்கொள்ள முடியும்? ஒரு வசனப்பகுதி அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் பற்றி நாம் ஒரு முடிவை அடைந்தபின்பு, “இது வேறு எந்த வகையிலாவது புரிந்துகொள்ளப்பட இயலுமா?” என்று எப்போதும் கேட்டுக்கொள்வது ஒரு வழியாக உள்ளது.

6. *மதிநுட்பமுள்ள தாழ்மை.* மேட்டிமை என்பது விளக்கம் அளிப்பவர், வேறு எவரும் முன்வைத்திராத கருத்துக்காகக் கண்ணோக்குதல் அல்லது சாட்சியத்தைப் பொருட்படுத்தாமல் தாம் நம்புகிறவற்றைப் பற்றிக்கொள்ளுதல் என்பதைச் செய்வதற்கு காரணமாக முடியும்.

மேட்டிமை என்பதைத் தவிர்ப்பதற்கு நாம் பின்வருவனவற்றை நினைவில் வைக்க வேண்டும்: (1) நாம் எல்லா ஞானத்திற்கும் ஆதாரமூலமாக இருப்பதில்லை; (2) ஆண்டுகளினூடே நாம் பல வேதவசனங்களின் விளக்கம் குறித்து நமது மனங்களை அனேகமாக மாற்றிக்கொள்வோம்;[11] (3) வேறு எவரும் எப்போதும் கண்டறியாத சில விஷயங்களை நாம் கண்டிறிந்தால், அது உண்மையாக இருக்கச் சாத்தியமில்லை; (4) ஒவ்வொரு கேள்வியைப் பற்றியும் அறிய வேண்டிய எல்லாவற்றையும் நாம் அறியக்கூடியவர்களாக இருப்பதில்லை.

7. *வேதாகமத்தின் மீது மதிப்பு.* நாம் வேதாகமத்தை மதித்து, அது தேவனுடைய வசனமாக உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் (1 தெசலொனிக்கேயர் 2:13; மேலும் காண்க 2 தீமோத்தேயு 3:16, 17). நாம் அவ்வாறு செய்யவில்லை என்றால், நாம் வேதவசனங்களைப் புரிந்துகொள்ளலாம், ஆனால் அவைகள் நமக்குள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை.

*8. தேவனுடைய சித்தத்தைச் செய்ய மனவிருப்பம்.* நாம், (1) வேதாகமம் ஒரு மாபெரும் இலக்கியப் புத்தகம் என்பதால் மாத்திரம், (2) வினோதப்பிரியத்தின் காரணமாக, (3) விவாதங்களில் வெற்றிபெற, (4) வேதாகமத்தில் தவறைக் கண்டறிய அல்லது (5) நம்மையே நாம் நியாயப்படுத்திக் கொள்ள மாத்திரம் வேதாகமத்தைப் படிப்பதில்லை. மாறாக நாம், தேவனுடைய சித்தத்தைக் *கற்றுக் கொள்ளவும்* அதன்படி *செய்யவும்* அதைப் படிக்கிறோம். "திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும்" இருத்தல் என்பதே (யாக்கோபு 1:22) நமது மனவிருப்பமாக இருக்க வேண்டும்.

*9. தேவனைச் சார்ந்திருத்தல்.* யாக்கோபு 1:5ன் படி,[12] நாம் ஞானத்திற்காகத் தேவனிடம் கேட்க வேண்டும்.

**குறிப்பிட்ட சில திறன்கள் உதவிநிறைந்தவையாக உள்ளன**

மேலே பட்டியலிடப்பட்ட எண்ணப்போக்குகளுடன் கூடுதலாக, வேதாகமத்திற்கு விளக்கம் அளிப்பதற்குத் தேவையான வேறு திறன்கள் என்னென்ன? குறைந்தபட்சம் நான்கு திறன்கள் முக்கியமானவையாக உள்ளன.

*1. நன்கு வாசிப்பதற்கு.*[13] மிகவும் முக்கியமாக, நாம் வாசிக்கவும் புரிந்துணரவும் திறன் கொண்டவர்களாக இருத்தல் அவசியம். மிகச்சரியாக வாசித்தலின் அவசியத்திற்கு ஒரு உதாரணமாக, யோசுவா 24:15ஐப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவும், இதன் ஒரு பகுதி, "யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்" என்று கூறுகிறது. தேவனைச் சேவித்தல் மற்றும் பிற தேவர்களைச் சேவித்தல் ஆகியலற்றிற்கு இடையில் நாம் ஒன்றைத் தேர்ந்து கொள்வது அவசியம் என்று கூறுவதற்கு நாம் இவ்வசனத்தைப் பயன்படுத்துகிறோம்; ஆனால் நாம் அவ்வசனத்தைக் கவனத்துடன் வாசித்துப் பார்த்தால், மக்கள் தேவனைச் சேவிப்பதைப் புறக்கணிக்க முடிவுசெய்தால், அவர்கள் வேறு எந்த தெய்வத்தைச் சேவிப்பார்கள் என்று யோசுவா அறைகூவல் விடுத்தார் என்பதை நாம் அறிகிறோம். 14 மற்றும் 15 வசனங்கள் பின்வருமாறு கூறுகின்றன:

> "... நீங்கள் கர்த்தருக்குப் பயந்து, அவரை உத்தமமும் உண்மையுமாய்ச் சேவித்து, உங்கள் பிதாக்கள் நதிக்கு அப்புறத்திலும் எகிப்திலும் சேவித்த தேவர்களை அகற்றிவிட்டு, கர்த்தரைச் சேவியுங்கள். கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ ..."

வசனப் பகுதியை நாம் கவனநிறைவுடன் வாசிப்பது அவசியமாக உள்ளது.

*2. தர்க்க அறிவைப் பயன்படுத்த.* நாம் காரண அறிவைப் பயன்படுத்தும் திறன் கொண்டவர்களாக, தர்க்க அறிவைப் பயன்படுத்தக் கூடியவர்களாக இருப்பது அவசியம். விசாரித்து அறியும், ஆராய்ந்து பார்க்கும் மனப்பான்மையும்

தர்க்கரீதியான வகையில் புரிந்துணருதலை நாடுதலும், ஒரு நபர் வேதவசனங்களின் அர்த்தம் பற்றிய மிகச்சரியான முடிவுகளை அடைய அவருக்கு உதவ முடியும்.

தர்க்க அறிவு என்பது, மொழியைப் பயன்படுத்துதல் மற்றும் விவாதங்களை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் உள்ளாக இருப்பதால், நாம் தர்க்க அறிவைப் பயன்படுத்துவது அவசியமாக உள்ளது. தேவனுடனான நமது உறவுமுறையானது சுத்தமான தர்க்கவியல் அடிப்படையின் மீது மாத்திரம் அமைந்திருப்பது இல்லை, ஆனால் வேதாகமம் தர்க்க அறிவைப் பயன்படுத்துகிறது. நியாயாதிபதிகள் 14:18ல் சிம்சோன், தமது மனைவி பெலிஸ்தர்களுக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தியிருந்தாள் என்று முடிவு செய்வதற்குத் தர்க்க அறிவைப் பயன்படுத்தினார். இயேசு தமது உவமைகளின் அடிப்படையில் கேள்விகள் கேட்டபோது, தர்க்க அறிவைப் பயன்படுத்தும்படி அழைப்பு விடுத்தார் (காண்க லூக்கா 10:36).[14]

விவரிப்பதற்குக் கடினமானதாக இருந்தாலும், "பொதுவான அறிவுணர்வு" என்பது அத்தியாவசியமானதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, "எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" (யோவான் 21:25) என்பது தெளிவாகவே ஒரு மிகைக்கூற்றாக[15] உள்ளது. அது அவ்வாறு உள்ளது என்று நம்மால் நிரூபிக்க இயலுமா? இல்லை, அந்த முடிவு பொதுவான அறிவுணர்வு பற்றிய விஷயமாக உள்ளது.

3. *கிரேக்கு மற்றும் எபிரெய மொழிகளை அறிந்திருக்க.* சாத்தியமானால், வேதவசனங்கள் மூலத்தில் எழுதப்பட்ட மொழிகளைப் பற்றி நாம் கற்றுக்கொள்ள வேண்டும்: கிரேக்கு மற்றும் எபிரெயம் ஆகிய மொழிகள். மிகச்சரியான வேதாகம விளக்கம் அளித்தலுக்கு இந்த மொழிகளை வாசிக்கும் திறமை அவசியமில்லை என்றாலும் கூட, அப்படிப்பட்ட அறிவு மிகவும் உதவிநிறைந்ததாக இருக்கிறது.

4. *வேறுபட்ட கலாச்சாரத்தினருக்கு விளக்கம் அளிக்க.* வேறுபட்ட கலாச்சாரத்தினருக்கு விளக்கம் அளிக்கும் திறனை நாம் கொண்டிருத்தல் அவசியம்: அந்தக் கலாச்சாரத்தில் எழுதப்பட்ட பாடங்களைப் புரிந்துகொள்ளும் நோக்கத்திற்காக இன்னொரு கலாச்சாரத்திற்குள் கற்பனையாகவும் பரிதவிப்புடனும் பிரவேசித்தல்.

வேதவசனங்களுக்கு விளக்கம் அளிப்பவர்கள், எழுத்தாளர்களையும் முதல் வாசகர்களையும் நம்மிடத்தில் இருந்து பிரிக்கும் "இடைவெளிகள்" பற்றி அடிக்கடி குறிப்பிடுகின்றனர் - அது மொழியில் ஒரு இடைவெளியாக, புவியியலில் ஒரு இடைவெளியாக, கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களில் ஒரு இடைவெளியாக உள்ளது. அந்த இடைவெளிகளுக்குப் பாலம் அமைக்க, வேறுபட்ட கலாச்சாரரீதியில் விளக்கம் அளிக்கும் திறன் தேவைப்படுகிறது. வேதாகமம் கலாச்சாரங்களுக்கு ஊடாக இருந்து நம்மிடத்தில் பேசுகிறது; நாம் அதை கலாச்சாரங்களுக்கு ஊடாகக் கேள்விப்படுகிறோம். வேதாகமம் எழுதப்பட்ட காலங்களின் கலாச்சாரங்கள் மற்றும் இன்றைய நாட்களின் கலாச்சாரங்கள் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள சில வேறுபாடுகளைக் கவனியுங்கள்:

- ரூத்தின் சரித்திரத்தில், இரு மனிதர்களுக்கு இடையிலான ஒரு வியாபார ஒப்பந்தம், ஒரு தாளில் கையெழுத்து இடுதலாலோ அல்லது கைகளைக்

*குலுக்கிக் கொள்ளுதலாலோ கூட நிறைவேற்றப்படவில்லை, ஆனால் அது ஒரு நபர் தமது செருப்புகளை இன்னொரு நபரிடம் கொடுப்பதால் நிறைவேற்றப்பட்டது (ரூத் 4:7).*

- *ஆமோஸ் 4:6ல் தேவன், "நான் உங்கள் பட்டணங்களில் எல்லாம் உங்கள் பல்லுகளுக்கு ஓய்வையும், ... கட்டளையிட்டேன்" என்று கூறினார், இது அவர்கள் மீது தேவன் ஒரு பஞ்சத்தை அனுப்பியிருந்தார் என்று அர்த்தப்பட்டது. நாம் இன்றைய நாட்களில் சுத்தமான பற்களைக் கொண்டிருக்க விரும்புகிறோம். அந்தக்காலத்தில் மக்கள் சுத்தமான பற்களைக் கொண்டிருந்தனர் என்னும்போது, அது அவர்கள் உண்பதற்கு ஒன்றும் இல்லாது இருந்தனர் என்று அர்த்தப்பட்டது என்பது உறுதி.*
- *யோவான் 13ல் இயேசு தமது சீஷர்களின் பாதங்களைக் கழுவியது என்பது அந்த நாட்களின் பழக்கவழக்கங்களின் வெளிச்சத்தில் மாத்திரமே புரிந்துகொள்ளப்பட முடியும்.*

*மாறுபட்ட கலாச்சாரத்தினருக்கு விளக்கம் அளித்தலின் அவசியமானது, வேதாகமத்தில் நாம் வாசிப்பதைப் புரிந்து கொள்வதற்காகவும் நாம் வாசிக்கும் மக்களின் வாழ்வுகள் மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றிற்குள் பிரவேசிக்கப் பரிவிரக்கமுள்ள வகையில் முயற்சிப்பதற்காகவும் நாம், பழங்காலக் கலாச்சாரங்கள் பற்றிப் படிக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.*

**வேதாகமப் படிப்பிற்கான அடிப்படைக் கருவிகள் உதவிநிறைந்தவையாக உள்ளன**

*வேதாகமப் படிப்பிற்கு உதவக்கூடிய பயன்நிறைந்த கருவிகள் கிடைக்கின்றன. ஒரு வசனப்பகுதியானது அதன் முதல் வாசகர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன மற்றும் அது இன்றைய நாட்களின் மக்களுக்கு அர்த்தப்படுத்துவது என்ன என்பவற்றைப் பற்றி வேதாகமத்திற்கு விளக்கம் அளிப்பவர் மிகச்சரியான முடிவுகளை அடைவதைச் சாத்தியமாக்கும் ஆதாரமூலங்களுக்கு, "கருவிகள்" என்பது பயன்படுத்துவதற்குப் பொருத்தமான ஒரு உருவகமாக உள்ளது. ஒரு தச்சர் அல்லது குழாய் பொருத்துபவர் தமது வேலையைச் செய்வதற்குக் கருவிகளை வைத்திருக்க வேண்டும்; அவ்வாறே, விளக்கம் அளிப்பவர் தமது வேலையைச் செய்யக் கூடும்படிக்கு தம் வசத்தில் குறிப்பிட்ட சில கருவிகளை வைத்திருக்க வேண்டும்.*

*<u>வேதாகமம்</u>. வேதாகமம் என்பது வேதாகமப் படிப்பிற்கு மிகவும் முக்கியமான புத்தகமாக உள்ளது. வேதாகமத்தின் வசனப்பகுதிகளை மாத்திரமின்றி, பல்வேறு படிப்பு உதவிகளைக் கொண்டுள்ள படிப்பு வேதாகமம் ஒன்றையும் ஒரு நபர் பயன்படுத்த முடியும். அது பின்வருவனவற்றில் எதையாவது அல்லது எல்லாவற்றையும் கொண்டிருக்கலாம்:*

*1. ஒவ்வொரு புத்தகத்திற்கும் சுருக்கமான அறிமுகவுரை.*

*2. வசனப்பகுதிக்குள் சேர்க்கப்பட்ட மற்றும்/அல்லது பக்கத்தின் மேல்பகுதியில் காணப்படும் தலைப்புகள்.*

*3. ஒரு வசனப்பகுதி வாசிக்கப்படும்போது, அதில் காணப்படுவது போன்ற வகையிலான திறவுகோல் வார்த்தைகளைப் பயன்படுத்தும் அல்லது அதே*

வகையான பாடக்கருத்தைக் கையாளும் பிற வசனப்பகுதிகளைக் குறிப்பிடும் மேற்கோள் குறிப்புகள்.

4. வசனப்பகுதியின் மாறுபாடுகள் பற்றி வாசகருக்கு உணர்த்த உதவும் மற்றும் பிற பயன்நிறைந்த தகவல்களை அளிக்கும் அடிக்குறிப்புகள் (அல்லது பக்கக் குறிப்புகள் அல்லது விளக்கக் குறிப்புகள்).

5. வரைபடங்கள்.

6. செறிவுள்ள ஒத்தவாக்கிய அட்டவணை.

7. ஒரு வேதாகம அகராதி.

படிப்பு வேதாகமத்தைப் பயன்படுத்துவதில் நாம், வேதாகம வசனப்பகுதி ஏவுதல் பெற்றது ஆனால் அதில் உள்ள படிப்பு உதவிகள் ஏவுதல் பெற்றவை *அல்ல* என்பதை நினைவில் வைக்க வேண்டும். படிப்பு உதவிகள் பயன்நிறைந்தவையாக இருக்கையில், அவைகள் மிகச்சரியாக இருக்க வேண்டும் என்பதற்கு உத்தரவாதம் கொண்டிருப்பதில்லை. அவைகள் கவனநிறைவுடன் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டும், ஆனால் அவைகள் தேவனுடைய வார்த்தைகளாக இருப்பது போன்று ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது.

வேதாகமப் படிப்பிற்கு நாம் சாதாரணமாகப் பயன்படுத்தும் பதிப்புகளுக்கு அப்பால் நாம், கலந்து ஆலோசிப்பதற்கு வேதாகமத்தின் *பிற பதிப்புகளை*[16] வைத்திருக்க முயற்சி செய்ய வேண்டும். பதிப்புகள் மதிப்பில் மாறுபடுகின்றன, ஆனால் அவற்றை ஒப்பிட்டுப்பார்த்தல் என்பது ஒரு வசனப் பகுதியைப் பற்றிய மிகச்சிறப்பான புரிந்துகொள்ளுதலை அடைவதில் நமக்கு உதவுவதாக இருக்க வேண்டும். உதாரணமாக, 1 கொரிந்தியர் 13:4-7ல் பவுலினால் விவரிக்கப்பட்டபடி, “அன்பு” என்பதில் உள்ளடங்கி இருப்பவை பற்றி அறிவதற்கு, மாறுபட்ட பல பதிப்புகளை ஒப்பீடு செய்தல் ஒளியூட்டுவதாக உள்ளது.

வேதவசனங்களையும் அவை உண்டாக்கப்பட்ட போதிருந்த உலகத்தையும் பற்றிப் புரிந்துகொள்வதில், மற்ற ஆதாரமூலங்களும் உதவிநிறைந்தவையாக இருக்க முடியும். விசேஷமாக, விளக்கவுரைகள் அடிக்கடி பயன்நிறைந்தவையாக உள்ளன.

*விளக்கவுரைகள்* வேதாகமத்தின் குறிப்பிட்ட புத்தகங்கள் மீதான விளக்கக் குறிப்புகளைக் கொண்டுள்ளன. ஒரு வேதவசனத்திற்கு விளக்கம் அளிக்க நாம் முயற்சி செய்யும்போது, உடனடியாக ஒரு விளக்கவுரையைக் கண்ணோக்குதல் என்பது நமது இயல்பான மனச்சாய்வாக இருந்தாலும், முதலில் நாம், அவ்வசனப் பகுதியைப் பற்றி நாமே சிந்தித்துப் பார்க்க முயற்சி செய்ய வேண்டும். விளக்கவுரையாளர்கள் என்ன கூறியுள்ளனர் என்பதை ஆழ்ந்து சிந்திப்பதற்கு முன்னர், சுயாதீனமான முடிவை அடைய முயற்சி செய்தல் என்பது படித்தலுக்கான மிகச்சிறப்பான வழியாக உள்ளது. நமக்கு நாமே அடைந்துள்ள முடிவுகளைப் பற்றி ஒரு விளக்கவுரை கூறுவதை நாம் விரும்பித் தேர்ந்து கொண்டால், நாம் எப்போதுமே நமது சிந்தனைகளையும் நமது விளக்கவுரையையும் சரிப்படுத்திக் கொள்ள முடியும். இருப்பினும் நாம் நமது சுயமாக ஒரு புரிந்துகொள்ளுதலை அடைய முயற்சி செய்வதில் பயன் அடைவோம்.

விளக்கவுரைகள் பெரிதும் வேறுபடுகின்றன. சில விளக்கவுரைகள்

வசனப்பகுதியின் அர்த்தத்தை அவற்றின் சொந்த சந்தர்ப்பப் பொருளில் வலியுறுத்தும் வேதவசன ஆய்வுரையாக உள்ளன; நடைமுறைரீதியாகவோ அல்லது பக்திரீதியாகவோ அவைகள் வசனப்பகுதியின் இன்றைய நாட்களின் வாசகர்களுக்கு அர்த்தத்தை வலியுறுத்துகின்றன; அல்லது அவைகள் அவ்வசனப் பகுதியைப் பிரசங்கியார் பிரசங்கிக்கக் கூடும்படியாக வழிமுறைகளை வலியுறுத்துகின்றன. மற்ற விளக்கவுரைகள் நுட்பம் வாய்ந்தவையாக, கல்வியாளர்களுக்கென்று வடிவமைக்கப்பட்டவையாக உள்ளன, இவைகள் மூலமொழியில் வசனப்பகுதியின் அர்த்தத்தை வலியுறுத்துகின்றன; சராசரி வாசகருக்கென்று வடிவமைக்கப் பட்டவை பிரபலமாகியுள்ளன; அல்லது இவ்விரண்டிற்கும் மத்தியில் இருப்பவைகளாக உள்ளன. மேலும் விளக்கவுரைகள் தங்கள் கருத்து வடிவமைப்பில் தாராளமானவையாகவோ அல்லது கட்டுப்பெட்டியானவைகளாகவோ இருக்கலாம்.[17] சிலவேளைகளில் புத்தகங்கள் தனிப்பட்ட திட்டங்களை முன்வைக்கின்றன - இவ்வகைகளில், அவற்றின் எழுத்தாளர்கள் குறிப்பிட்ட சில உபதேசங்கள் அல்லது கருத்துக்களை விளம்பரப்படுத்துவதற்கு ஏற்ற ஒவ்வொரு வாய்ப்பையும் கண்ணோக்குகின்றனர்.

ஒரு விளக்கவுரை எவ்வாறு மதிப்பிடப்பட வேண்டும்?[18] முதலாவது, ஒரு விளக்கவுரையை அல்லது விளக்கவுரை வரிசையைப் பயன்படுத்தத் தொடங்கும்போது, அதன் எழுத்தாளர் மற்றும்/அல்லது புத்தகவரிசையின் முன் அனுமானங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி நமக்கு நாமே பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு புத்தகம் எதைக் சாதிக்க விருப்பநோக்கம் கொண்டுள்ளது என்பதைக் கொண்டுதான் முடிவு செய்யப்பட வேண்டும்; ஒரு வசனப்பகுதி எதைப் போதிப்பதாக நாம் புரிந்துகொண்டுள்ளோமோ அதற்கு ஒரு விளக்கவுரைப் புத்தகத்தில் இலக்குகள் பொருந்தவில்லை என்றால், நாம் அந்த விளக்கவுரையைப் பயன்படுத்தவே கூடாது அல்லது அது கூறும் ஒவ்வொன்றையும் பற்றி கவனநிறைவுடன் சிந்தித்து, அதை "இலேசாகப்" பயன்படுத்த வேண்டும். அடுத்ததாக, ஒரு வசனப்பகுதியை அதன் சொந்த சந்தர்ப்பப் பொருளில் புரிந்துகொள்ளுதல் என்பதே, விளக்கம் அளித்தலில் நமது முதன்மை நோக்கமாக உள்ளது என்பதால், வேத ஆய்வுரையை வலியுறுத்தும் விளக்க உரைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மூன்றாவது, வேதாகமம் பற்றிய மக்களின் விளக்க உரைகள் பயன் நிறைந்தவையாக இருக்கக் கூடும், ஆனால், ஏவப்பட்டவையல்ல என்பதை நாம் நினைவுகூரக் கடவோம். நாம் வாசிப்பது என்ன என்பதை நாம் திறனாய்வுடன் சிந்திக்க வேண்டும் மற்றும், ஒரு விளக்கவுரையில் நாம் கண்டோம் என்பதற்காக மாத்திரம் எதையேனும் ஏற்றுக்கொண்டு விடக்கூடாது.[19]

---

குறிப்புகள்

[1]Bernard Ramm, *Protestant Biblical Interpretation,* 3d rev. ed. (Grand Rapids, Mich.: Baker Book House, 1970), 14-16. [2]எடுத்துக்காட்டாக, யோவான் **14:15**ஐ எவரொருவரும் சுலபமாகப் புரிந்துகொண்டு அதை நடைமுறைப்படுத்த முடியும். [3]Ramm., 12-13. [4]William W. Klein, Craig L. Blomberg, and Robert L. Hubbard, Jr., *Introduc-*

*tion to Biblical Interpretation*, rev. and exp. (Nashville: Thomas Nelson Publishers, 2004), 139. [5]*நியாயமாகக் கூறுவதென்றால், இவ்விரு ஆதாரமூலங்களுமே, பரிசுத்த ஆவியானவரால் ஒளியூட்டப்படுதல் என்பது, ஊக்கமான முயற்சி செய்தல் அல்லது தக்கவகையிலான விளக்கம் அளிக்கும் முறைமைகளைப் பயன்படுத்துதல் என்பவற்றிற்குப் பதிலி என்ற வகையில் சார்ந்திருக்கப்படக் கூடாது என்றே கூறுகின்றன.* [6]Ramm, 13. [7]*லூக்கா 2:26; நடபடிகள் 2:27, 31; 1 பேதுரு 3:10 ஆகிய வசனப் பகுதிகளை வாசிக்கவும்.* [8]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick W. Danker (Chicago: University of Chicago Press, 2000), 279-80; George R. Beasley-Murray, *John*, vol. 36, 2d ed., Word Biblical Commentary (Nashville: Thomas Nelson Publishers, 1999), 48. [9]*அவிசுவாசிகள் ஆவிக்குரிய விஷயங்களைப் பற்றிச் சரியான வகையில் மனதில் புரிந்துகொள்ள இயலாது என்று பவுல் கூறவில்லை. அவர்கள் அதைச் செய்ய முடியும் மற்றும் அதைச் செய்கின்றனர், ஆனால் அவர்கள், எழுத்தாளரின் அர்த்தம் பற்றிய இந்தப் புரிந்துகொள்ளுதலை ஒரு எதிர் மறைக் குறிப்பிற்கு உரித்தாக்குகின்றனர். அவர்கள் இதை "பைத்தியக்காரத்தனமானது" என்று புறக்கணிக்கின்றனர்.* (Robert H. Stein, *Playing by the Rules: A Book Guide to Interpreting the Bible* [Grand Rapids, Mich.: Baker Books, 1994], 66.) [10]*கிளெய்ன், புளூம்பெர்க் மற்றும் ஹப்பர்டு ஆகியோர், "விசுவாசிக்காதவர் வேதாகமத்தைப் புரிந்துகொள்ள இயலாது என்று நாம் முரட்டுத்தனமாக உறுதிப்படுத்துவது இல்லை. அவிசுவாசிகளும், நம்பிக்கை இல்லாதவர்களும்கூட, அதன் அர்த்தத்தை வெகுவாகப் புரிந்துகொள்ள முடியும் … இவ்வாறு, திறமைவாய்ந்த, அவிசுவாசம் கொண்ட கல்வியாளர் வேதாகமத்தின் புத்தகம் ஒன்றைப் பற்றி மிகச்சிறப்பான நுட்பம் கொண்ட விளக்கவுரை ஒன்றை எழுத முடியும் … ஆனால் அவிசுவாசம் கொண்ட அந்தக் கல்வியாளர், வேதாகமச் செய்தியின் உண்மையான தனிச்சிறப்பைப் புரிந்துகொள்ளவோ அல்லது அதைச் சித்தரித்துக் காண்பிக்கவோ இயலாது" என்று ஒப்புக்கொண்டனர்.* (Klein, Blomberg, and Hubbard, 136.)

[11]*எனது சகோதரர் டேவிட் ரோப்பர் அவர்களிடம், ஒரு குறிப்பிட்ட வசனம் அல்லது ஒரு விஷயத்தைக் குறித்து அவரது கண்ணோட்டம் பற்றிக் கேட்கப்படும்போது அவர், "(உதாரணமாக) ஜூலை 20, 1975 தேதியின்படி நான் இவ்வாறு நம்புகிறேன்" என்று கூறுவதுண்டு, இது அவர் எதிர்காலத்தில் அந்த விஷயங்களை மாறுபட்ட வகையில் கண்ணோக்கச் சாத்தியம் உள்ளது என்பதைத் தெளிவாக்குகிறது.* [12]*மேலும் காண்க மத்தேயு 7:7-9; 1 யோவான் 5:14, 15.* [13]*அதாவது, நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது பயன்படுத்தும் மொழி எதுவாக இருந்தாலும், திறமையாக அதை வாசிக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.* [14]*வேதாமரீதியான மார்க்கமானது, குறிப்பிட்ட சில "கொடுத்தல்கள்" மீது அடிப்படை கொண்ட தர்க்கரீதியான ஒரு முறைமையாக உள்ளது, விசேஷமாக அது (யோவான் 8:24; 14:6 ஆகியவற்றில் உள்ளது போன்ற) ஒரு விஷயம் உண்மையானது என்றும் இன்னொன்று (காண்க நடபடிகள் 4:12) உண்மையாக இருக்க முடியாது என்றும் போதிக்கிறது. இதற்கு நேர்மாறாக, உதாரணமாக இந்து மதம், முற்றிலும் உண்மையான விஷயம் என்று ஒன்றுமில்லை என்பதாகப் போதிக்கிறது.* [15]*மிகைக்கூற்று* ("hyperbole") *என்பது மிகைப்படுத்திப் பேசும் பேச்சை உள்ளடக்குகிறது.* [16]*"பதிப்பு" ("பொழிப்புரை" அல்ல) என்பது ஒரு மொழிபெயர்ப்பாக உள்ளது.* [17]*இந்தப் புத்தகத்தின் புற்பகுதியில் உள்ள துணைப்பாடப் பிரிவில் காணப்படும் "எழுதப்பட்ட கருத்துக்களில் காணப்படும் வேதவசனங்கள் பற்றிய இரு கண்ணோக்குகள்" என்ற துணைப்பாடத்தில் காணவும்.* [18]*கோர்டன் ஃபீ மற்றும் டக்ளஸ் ஸ்டுவர்ட் ஆகியோரின் கருத்துப்படி, "இந்த விளக்கவுரையானது வேதாகம வசனப்பகுதி உண்மையில் கூறியுள்ளவற்றைப்*

*புரிந்துகொள்வதில் உங்களுக்கு உதவியதா?" என்பதே விளக்கவுரைகள் பற்றிய மிகவும் முக்கியமான கேள்வியாக உள்ளது. விளக்கவுரைகளை மதிப்பிடுவதற்கு அவர்கள் ஏழு நிபந்தனைகளைக் கொடுத்தனர்.* (Gordon D. Fee and Douglas Stuart, "The Evaluation and Use of Commentaries," *How to Read the Bible for All Its Worth,* 3rd ed. [Grand Rapids, Mich.: Zondervan, 2003], 266-67.) [19]*இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள துணைப்பாடப் பிரிவில் காணப்படும் "விளக்கம் அளித்தலில் உதவுவதற்கான தகவல்களின் ஆதாரமூலங்கள்" என்ற துணைப்பாடத்தில் கூடுதல் உதவிகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.*